# கவிக்கோ விருது வழங்கும் விழா

## 29-01-2000

கவிக்கோ கவிதை விருது பெறுபவர் ஒருவர்தான் என்றாலும் கௌரவிக்கப்படுபவர்கள் அல்லது கௌரவிக்கப்படுவது இருவர். விருது பெறுபவர் டாக்டர் கலைஞர் ஆதலின்

கவிக்கோ கவிதை விருது கௌரவிக்கப்படுகிறது.

கலைஞருக்கு இவ்விருதினை வழங்கும் வாய்ப்புப்பெற்றதனால் நான் கௌரவிக்கப்படுகிறேன்.

இது தான் யதார்த்த நிலை. இதில் அணுவளவும் உயர்வு நவிற்சி இல்லை.

பொதுவாகத் துணைவேந்தர்கட்கு ஒரு தனி வாய்ப்பு உண்டு. மையப்பல்கலைக் கழகங்களில் பட்டம் வழங்குபவர் துணைவேந்தர்தான். மாநிலப் பல்கலைக் கழகங்களில் பட்டம் வழங்குபவர்கள் வேந்தர்கள். துணைவேந்தர்கள் தங்கள் தகுதிக்குப் பன்மடங்கு மிஞ்சியவர்கட்கும் பட்டம் வழங்குவதுண்டு. சான்றாக இந்தியாவுக்குப் பல அயல்நாட்டுப் பிரமுகர்கள் அதாவது பிரதமர்கள் ஆட்சித்தலைவர்கள், அரசர்கள் கூட வருகிறார்கள். அவர்களை கௌரவ டாக்டர் பட்டம் கொடுத்து கௌரவிக்க வேண்டுமென மைய அரசு விரும்பினால் பெரும்பாலும் தில்லி பல்கலைக் கழகத்தில் ஏற்பாடுசெய்வார்கள். அப்பொழுது தில்லி பல்கலைக் கழகத் துணைவேந்தர்தான் அவர்கையால்வழங்குவார். ஆனால் அவர் பல்கலைக் கழகம் எனும் நிறவனத்தின் தோல் மீது நிற்கிறார். அந்தப் பொறுப்பு அவரைத் தூக்கி நிறுத்துகிறது. ஆனால் எனக்கு அப்படி ஒரு தகுதியும் இல்லை. நான் முன்னாள் துணைவேந்தர். இன்னாள் துணைவேந்தர் அல்ல. இன்று கவிக்கோ கவிதை விருதினை நான் வழங்க. அவர் பெறுவது எனும் ஏற்பாட்டுக்கு என்மீது அவருக்கு இருக்கும் அன்பு ஒன்றுதான் காரணம். அன்புள்ளம் உயர்வு, தாழ்வு பார்ப்பதில்லை.

இன்றிலிருந்து 10 ஆண்டுகட்கும் சற்று முன்பாக அவரது பொன்னர்-சங்கர் நூல வெளியீட்டில் நான் கலந்து கொண்டேன். அப்பொழுது அவர் முன்னாள் முதல்வர்: இன்று அவர் இன்னாள் முதல்வர் . முதல்வர் பொறுப்பு வரும் போகும் அதன் இயற்கையே அப்படிப்பட்டதுதான். பொதுவாக முன்னாள், இன்னாள் என்பதின்றி. அவர் எந்நாளும் ஆட்சி செலுத்தும் ஒரு துறை உண்டு. அதுதான் இலக்கியத் துறை.

- இலக்கியத்துறையில் அவரது மகுடத்தை யாராலும் பறிக்க இயலாது.
- அதே போல, இராஜராஜன் விருது பெற்றமைக்குப் பாராட்டு விழா நடத்திய பொழுது முன்னாள் குடியரசுத் தலைவர் அவரது பரிசாக வழங்கிய எழுதுகோலையும் யாராலும் எடுத்துக் கொள்ள இயலாது.

எனவே நான் கழக ஆட்சி முதல்வரைக் கொஞ்ச நேரம் மறந்து, கலை ஆட்சி முதல்வரைப் பற்றிப் பேச விரும்புகிறேன்.

நாம் தமிழர் பண்பாடு, தமிழ்பண்பாடு என மேடை தோறும் பேசுகிறோம். எழுதுகிறோம். இன்று யாராவது ஒரு அந்நியமொழியினர். தமிழர் பண்பாட்டின் தனித்தன்மை என்ன? குறிப்பிடத்தக்கக் கூறுபாடுகள் என்ன எனக்கேட்டால். இந்த நூலைப் படியுங்கள் என எடுத்துக் கொடுக்கத்தக்க ஒரு நூல் 100 அல்லது 150 பக்க முள்ள நூல் ஆங்கிலத்தில் இல்லை. தமிழிலும் இல்லை. தமிழர் பண்பாட்டில் உள்ள ஒரு தலைசிறந்த கூறுபாடு: தமிழினம் எந்த இனத்தையும் : விட அதிகமாக இலக்கியப் படைப்பை மதித்த இனம்: கவிஞனை மதித்த இனம்.

எழுதித் திருத்துபவர்: எழுதி முடித்த பின்னர்
பழுதென்று ஒதுக்குபவர்: பாடிப் புகழ்காண
ஒரு கவிதை போதுமெனும் உள்ளத்தல் சொல்லமைந்தன
இருவரியும் போதுமென எண்ணுபவன்

என்பான் கவிஞன்.

பாடிப்புகழ்காண
ஒரு கவிதை போதும் எனும் உள்ளத்தின்: சொல் அமைந்தால்
இருவரியும் போதும் என எண்ணுபவர்
என்று ஒரு தமிழ்க் கவிஞன்தான் கூற முடியும்
ஏனெனில் அவன் பிறந்த இனத்திற்கு அந்தப்
பாரம்பரியம் இருக்கிற. எனவே அவன் மன
உறுதியோடும் பெருமையோடும்
ஒரு கவிதை பாவுலகில் உயர்வு பெறப் போதுமெனும்
பெருமையுளர் எம்மினத்தர்: பெருங்கவிஞன் பூங்குன்றன்
சான்றாவான்: அக்குழுவி தமிழ் நிலத்து மன்னருளர்
எனப் பிரகடனம் செய்கின்றான். தன் பெயரில் ஒரே கவிதை.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற தொடங்கும் ஒரே கவிதையை மட்டும் கண்ட கணியன் பூங்குன்றனுக்கு அந்த ஒரு கவிதைக் காகவே இறவாப்புகழ் தந்தது தமிழ் நாடு. இன்னும் கூறப்போனால், "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" எனும் ஒரு வரிக்காகவே இறவாப்புகழ் தந்தது உலகிலேயே தமிழினம் ஒன்றாகத்தான் இருக்கமுடியும். அந்தப் பாரம்பரியத்தின் பிரதிநிதி கலைஞர் அந்தப் பாரம்பரியத்தின் தொடர்ச்சி கலைஞர்.

இலக்கியப் படைப்பிற்கு இந்த அளவு ஏற்றம் இருந்த காரணத்தால் அன்று அரசரும் பாடினார். அமைச்சரும் பாடினால். வணிகரும் பாடினர். வள்ளலும் பாடினர்.

செங்கோல்பிடித்தவர் எழுதுகோல் பிடிப்பதும் தமிழ்ப் பண்பாட்டில் ஒரு பகுதி.

கண்டாலம்ம இவ்வுலகம் . . . . என்று தொடங்கி
புகழெனின் உயிரும் கொடுக்குவர்
பழியெனின் உலகுடன் பெரினும் கொள்ளலர்
அன்னமாட்சி அனையராசித்

தனக்கென வா நோன்றாள்

பிறழ்க்கென வாழுநர் உண்மையானே

என்று முடியும் ஒரு பாடால் இலக்கிய உலகில் இறவாவரம் பெற்றவர். இனப்பெருவழுதி யெனும் பண்டியமன்னர். அவன் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த. அவனினும் வலிய பெரிய மன்னர்களதை தமிழகம் மறந்துவிட்டது. ஆனால் பாண்டியன் இளம்பெரு வழுதியை ஒரு கவிதைக்காகத் தமிழகம் சிரஞ்சீவியாக்கி விட்டது.

பெரிய புராணம் பாடிய சேக்கிழார் அநபாய சோழனிடம் அமைச்சராக இருந்தவர். இன்று காவியம் படைத்த சேக்கிழார்தான் அவர் அமைச்சராகவும் இருந்ததை அடையாளம் காட்டுகிறார். பெரியபுராணம் இல்லாதிருந்தால் நாம் அநபாய சோழனை அவ்ளவாக எண்ணமாட்டோம். அமைச்சர் சேக்கிழாரை அறிந்திருக்கவும் மாட்டோம்.

"வாய் வாளாது வண்டமிழ் இகழ்ந்த கனக" விசயர்கள் தலை மீது கல்வைத்துக் கொணர்ந்த சேரன் செங்குட்டுவனுக்குத் தமிழகம் சிலையெடுக்கவில்லை. அவனது இளவல் இளங்கோ படைத்த கண்ணகி சிலைதான் கடற்கரையில் கம்பீரமாக நிற்கிறது.

வாழையடி வாழையென வரும் தமிழ் இலக்கிய மரபில். செங்கோலொரு எழுதுகோல் அவ்வப்பொழுது சேர்ந்தே வந்திருக்கிறது. இது ஒரு நீண்ட வரலாறு. இந்த வரலாற்றின் ஓர் ஒளிமிகுந்த அத்தியாயம். ஓர் உன்னதமான பகுதி கலைஞர் கலைப்படைப்பு. எந்தக்கோணத்தில் பார்த்தாலும் எந்த அளவு கோலை வைத்து அளந்தாலும் கலைஞர் காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஓர் இணையற்ற காலம்.

கலைஞருடைய பரிமாணங்கள் பல. எல்லோரும் கூறுவதுதான். இருந்தாலும் நான் அதை மீண்டும் இங்கு கூறத்தான் வேண்டும் அவன்:

- தலைசிறந்த பேச்சாளர்
- தன்னிகறற்ற அமைப்பாளர்
- அரசியல் தலைவர்
- நாடக ஆசிரியர்
- நாடக நடிகர்
- பேசும்பட கதை வசன எழுத்தாளர்
- பேசும்படத் தயாரிப்பாளர்
- பத்திரிகாசிரியர்
- புதினம் சிறுகதைப் படைப்பாளர்
- கட்டுரையாளர்
- கவிஞர்
- பேசும்படப் பாடாலாசிரியர்
- கட்சித் தலைவர்

- தன்னிகர் அற்ற ஆட்சித் தலைவர்

இந்தப் பதினான்கு பரிமாணங்களில் ஒவ்வொரு துறையிலும் பங்களித்தவர், ஒவ்வொன்றுக்கும் சான்று காட்டலாம். இங்கு புகழ்ச்சியில்லை. உயர்வு நவிற்ச்சியில்லை. நால மனச்சான்றை மறந்து பாராட்டுபவன் அன்று அவரது இன்றைய நிலையில் எனது பாராட்டு அவருக்குத் தேவையுமில்லை. ஆதலால் அவருக்குப் பயனுமில்லை. நாம் கூறுவதுயாரும் ஏற்கத்தக்க யார் பார்வைக்கும் தப்பாத நிதர்சனமான உண்மைகள்.

இறைவனுக்குக்கூட 10 அவதாரங்கள் எடுக்கப் பத்துப்பிறவி தேவைப்பட்டது. ஆயிரம் ஆண்டு காலம் தேவைப்பட்டது. கலைஞர் அவர்கள் ஒரு பிறவியில், ஓர் எழுபத்து ஐந்து ஆண்டு காலப் பகுதியில் 14 அவதாரங்கள் எடுத்திருக்கிறார் இதுவும் ஒன்று முடிந்தபின் இன்னொன்று என்பதல்ல. ஒரே சமயத்தில் பல பரிமாணங்கள் இது ஏறத்தாழ அஷ்டாவதானம், தசாவதானம் போல ஒரே சமயத்தில் பல அவதாரங்களில் பொறுப்பில் பங்களிப்பு. பொதுவாக, ஒவ்வொன்றும் ஒரு சாதாரணக் குடிமகனுக்கு முழுநேர வேலை.

இயற்கை தாராளமனம் கொண்டது. எத்தனையோ வசதிகளைப் படைத்தளித்திருக்கிறது. அதை எண்ணித் தான் பாரதி கூட "எத்தனை கோடி இன்பம் வைத்தோம் இறைவா" என்று பாடுகிறார். பொதுவாக இவ்வளவு தாராளமான இயற்கை தனிமனிதர் என்று வரும் பொழுது அவ்வளவு தாராளமாக இருப்பதில்லை. ஒருவசதியைக் கொடுத்தால் இன்னொரு வசதியைக் குறைத்துவிடும். எழுத்தாளர் பேச்சாளராக இருப்பதில்லை. இரண்டும் அமைந்தாலும் கவிதை வருவதில்லை. உயர்ந்த அறிஞர் சிறந்த நிர்வாகியாக இருப்தில்லை. இவைதான் இயற்கையாக நாம் காணுவது. இந்த இயற்கைக்கு மாறான சில அதிசயங்களை நாம் இயற்கையில் காண்பது உண்ட. அப்படிப்பட்ட அதிசயம்தான் கலைஞர்.

அவருடைய பன்முகப் பரிமாணங்கள் ஒரு புறமிருக்க நாம் அவருடைய கலையுலகை மட்டும் கருத்தில் கொண்ட கலைஞரின் பங்களிப்பை மதிப்பிடுவோம்.

திமுக என்ற இயக்கத்தையும், அவரையும் பிரிக்க இயலாது. அவர் எந்தப் பரிமாணத்தில் செயல்பட்டாலும் அதில் திமுகவின் ஏதாவது ஒரு கூறுபாடு இருக்கும். எனவே நாம் முதலில் திமுகவின் அம்சங்களைப் பிரித்துப் பார்க்க வேண்டும். அது ஒரு சாதாரண அரசியல் கட்சி அல்ல. அதுவல்ல நோக்கங்களை உள்ளடக்கிய ஓர் இயக்கம். அவையாவன:

- திமுக ஓர் அரசியல் கட்சி
- திமுக ஓர் சமுதாயச் சீர்திருத்த இயக்கம்
- திமுக ஒரு தமிழின, தமிழ் மொழிப் பாதுகாப்பு இயக்கம்.

அரசியல் கட்சி பற்றிக் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால் சமுதாயச் சீர்திருத்தம், தமிழினப் பாதுகாப்பு, தமிழ் மொழிப் பாதுகாப்பு என்பன எல்லோருக்கும் பொதுவானவை. உண்மையாகப் பார்க்கப்போனால் சமுதாயச் சீரமைப்பு, தமிழ்மொழி, தமிழினப் பாதுகாப்பு ஆகியவைதான் நோக்கங்கள். திமுக என்பது பெரிய அளவில் அதையடையப் பயன்படுத்திப் படும் கருவி. இப்பொழுத நாம் கருவியை வட்டுவிட்டு நோக்கங்கள மட்டும் எடுத்துக் கொள்வோம். கலைஞருடைய படைப்புகள் அனைத்தும் அது கட்டுரையாவினும், கவிதையாயினும், புதினமாயினும், சிறுகதையாயினும், நாடக மாயினும், பேசும்பட மாயினும் இந்த நோக்கங்களை முன்னெடுத்துச் செல்வதற்காகப் படைக்கப் பட்டவையேயாகும்.

வின்ஸன்ட் சர்ச்சில் நீங்கள் எல்லோரும் அறிந்த பெயர் இரண்டாவது உலகப்போரில் பிரிட்டனுக்கு வெற்றியை வாங்கித் தந்தவர். அவரைப் பற்றி அமெரிக்காவில் கூறிய கருத்து ஒன்று குறிப்பிடத்தக்கது. இரண்டாவது உலகப்போரில் சர்ச்சிலின் சொற்பொழிவுகள் பெரிய அளவில் மக்களை ஊக்குவிக்கவும் துணிவூட்டவும் பயன்பட்டன. அதைக்குறிப்பிட வந்த கென்னடி சர்ச்சில் ஆங்கிலத்துக்குக் கவசம் அணிவித்து கேடயமும் வாளும் கொடுத்துப் போருக்கு அனுப்பினார். அதைப் போலவே கலைஞர் அவர்கள் தமிழ் மொழிக்குத கவசம் அணிவித்து கேடயம் கொடுத்து, வாள்கொடுத்து, தமிழ் மொழி, தமிழ் இனப் பாதுகாப்புக்கு அனுப்பியிருக்கிறார் அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார்.

திராவிடா இயக்கத்தின் தாக்கம் பற்றி எதிர்கால வரலாற்றாசிரியன் கணிக்கும் பொழுது தமிழ் இலக்கிய உலகில் அது ஏற்படுத்திய மாபெரும் இலக்கியத்தின் நடையில், அதைப் பயன்படுத்துவதில், அதன் பரவலில். அதன் ஈரப்பில், பொதுமக்களிடம் பெற்ற வரவேற்பில் ஒரு மாபெரும் புரட்சியைத் திராவிட இயக்கம் உருவாக்கியது என்பதை யாரும் மறுக்க இயலாது. இந்தப் புரட்சியின் சிகரம் போல விளங்கியவர்கள் அண்ணாவும், கலைஞருமாவர். அண்ணா ஆசிரியர், கலைஞர் ஆசிரியருக்கு ஏற்ற, ஆசிரியருககு உண்மையுள்ள மாணவர். பொதுவுடமைத் தத்துவத்தில் தந்தையான மார்க்சுக்கு அவர் காலத்தில் ஒரு லெனின் கிடைக்கவில்லை. புத்தருக்கு அவர் காலத்தில் ஒரு அசோகன் கிடைக்கவில்லை. அண்ணாவுக்கு அவர் காலத்திலேயே ஒரு கலைஞர் கிடைத்தார்.

அண்ணா, கலைஞர் இவர்கள் இருவருமாகச் சேர்ந்து தமிழ் உரைநடையில் தமிழ் இலக்கியத்தில் ஒரு புதிய சாகாப்தத்தை உருவாக்கியவர்கள். சென்ற நூற்றாண்டில் தமிழுக்கு அகராதியை உருவாக்கிய வின்ஸ்லோ, தமிழறிஞர்கள் நினைத்த மாத்திரத்தில் செய்யுள் எழுதும் திறமை வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்றாலும் பிழையின்றி இரண்டொரு வரிகள் கூட உரைநடை எழுத இயலாதவர்களா உள்ளார் என்று எழுதுகிறார். தமிழ் உரைநடை எழுத இயலாதவர்களா உள்ளார் என்று எழுதுகிறார்.

தமிழ்உரைநடை இலக்கி யத்திற்கு நீண்டு காலப் பாரம்பரியம் இல்லை. தமிழ் உரைநடைக்கு எளிமையூட்டி, எழில் சேர்த்து. மக்கள் மன்றத்திற்குக் கொண்டு வந்தவர் திருவிக அவர் தமிழ் தென்றால் போன்றது இனிமையானது. மென்மையானது அவருக்குப்பின் தமிழ் உரைநடையை வளர்த்தவர்கள் பலர் எனினும் தமிழ் உரைநடையைக் கரைபுரண்டோடும் வெள்ளமாக மாற்றியவர்கள் அண்ணாவும் கலைஞருமாவர். அவர்கள் ஒருபுறம் ஆசிரியர். மாணவர் எனினும். இந்த 20-ஆவது நூற்றாண்டைப் பொருத்தவரை வரலாறு அவர்களை மாபெரும் இரட்டையர்கள் எனப் பதிவு செய்யும் என்பதில் ஐயமில்லை. அண்ணா-கலைஞர் காலம் எனக்குறிப்பிடும் என்பதில் எனக்கு அணுவளவும் ஐயமில்லை.

மேடையிலாகட்டும், நாடகத்திலாட்டும். பேசும் படத்திலாகட்டும் கதைகள், கட்டுரைகளிலாகட்டும் பேசும் படத்திலாகட்டும் கதைகள், கட்டுரைகளிலாகட்டும் அண்ணா, கலைஞர் காலத்திற்கு முன்பு இருந்த தமிழ் வேறு. அவர்கள் காலத்திற்குப்பின் இருக்கும் தமிழ் வேறு என்று கூறத்தக்க அளவிற்கு அவர்கள் தாக்கம் இடம் பெற்றிருக்கிறது.

நாடகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அண்ணா ஏறத்தாழ 40 நாடகங்கள் எழுதியுள்ளர். கலைஞர் 18 நாடகங்கள் போல எழுதியுள்ளார். அண்ணா, கலைஞர் காலத்துக்கு முன்பு நாடகம் பார்த்து விட்டு வந்த இளைஞர்கள் மறு நாள் நாடகத்தில் கதாநாயகன், கதாநாயகி பாடிய பாடல்களைப் பாடினார்கள். ஆனால் அண்ணா கலைஞர் நாடகத்தைப் பார்த்து விட்டு வந்தவர்கள் மறுநாள் கதாநாயகன், கதாநாயகி பேசிய வசனத்தைப் பேசினார்கள். அவர்கள் வசன நடையில் காந்தம் போன்ற ஓர் ஈர்ப்பு இருந்தது மின்சாரம் போன்ற ஒரு வகை இருந்தது. தமிழ் உரை நடையில் ஒரு புதிய ஆற்றல், மலர்ந்தது.

நாடகங்கள் மக்கட்குக் கதையை மட்டும் எடுத்துச் செல்லவில்லை. புதிய தமிழையும் எடுத்துச் சென்ற. இலைஞர்கள் தமிழில் ஒரு புதிய ஆற்றலைக் கண்டனர், புதிய ஓட்டத்தைக் கண்டனர். நாடகங்கள் தமிழ் மொழியில் ஒரு புதிய கதவைத் திறந்து விட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது (..)புதிய உலகைக்காண விரும்பு இளைஞர்கள் சமுதாய சீர்திருத்தவாதிகள்.

நாடகத்தில் இடம் பெற்ற மொழி, நடை ஒரு புறம் இருக்க. அது மக்கட்கு எடுத்துச் செல்லும் செய்தியிலும் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. மேடைகளில் இது வரை தலைகாட்டாத பாத்திரங்கள் தலைகாட்டின. ஏழைகள், தொழிலாளிகள், நிலப்பிரபுக்கள், சமுதாயத்தின் அடித்தளத்தில் அழுத்தப்பட்டுப் பெருமூச்சு விடுபவர்கள், (00) இப்படிப் புதிய பாத்திரங்கள். இவர்கள் புதிய தமிழையும் பேசினார்கள், புதிய

கருத்தகளையும் எடுத்துச்சொன்னார்கள். தமிழின் பெருமை பேசினார்கள். தமிழின் பெருமை பேசினார்கள் இராமாயணம், மகாபாரதம் கொடர்பான நிகழ்ச்சிகளே பேசப்படுவது மாறிச் சங்க கால நிகழ்ச்சிகள். அவற்றோடு இணைந்த சற்பனைகள், கதைகள் மேடையில் பேசப்பட்டன. தமிழ் நாடகமேடையில் சொல் புதிது, பொருள் புதிது. சுவை புதிது என்ற நிலைமை உருவானது.

அண்ணாவும், கலைஞரும் நாடகம் எழுதினார்கள் என்பது மட்டு மன்று அவர்கள் நாடகத்தில் நடிக்கவும் செய்தார்கள். அன்றைய இலக்கிய உலகில் பயணத்தில் அவர்கள் பார்வையாளராக இருக்கவில்லை பயணிகளாகவும் இருந்தார்கள். பதிவு செய்தவர்களாகவும் இருந்தார்கள்.

நாடகத்தின் தொடர்ச்சியாகப் பேசும்படத்தினையும் தங்கள் கருத்தை எடுத்துச் சொல்வதற்கும் கலைப் படைப்பிற்கும் பயன்படுத்தினார்கள். அண்ணா அவர்கள் கதைவசனம் எழுதிய படங்கள் ஒரு புதிய. சகாப்தத்தைத் தொடங்கி வைத்தார். கலைஞர் அதன் முழுமையையும் எழுதி முடித்தார். அண்ணா, கலைஞர்காலத்திற்கு முன் பேசும் படங்கள்

- நடிகர் கதை ஓடின
- பாடல்கட்காக ஓடின
- பாட்டுப்புத்தகங்கள் விற்பனையாயின
- இசைத் தட்டுகள் விற்பனையாயின
- இசைத்தட்டுகள் விற்பனையாயின. ஒலி நாடாக்கள் விற்பனையாயின அண்ா கலைஞர் காலத்தில்
- படங்கள் வசனத்திற்காகவும் ஓடின
- பாட்டுப் புத்தகங்கள் மட்டுமன்றி வசனங்களும் புத்தகமாக வெளியிடப்பட்டன
- வசனங்களும் புத்தகமாக வெளியிடப்பட்டன
- வசனங்க்ளும் தட்டுகளாக, ஒலிநாடாக்களாக விற்பனையாயின
- நடிகர்கள் , இயக்குநர்கள் கனவிற்கு கதை வசனம்
- எழுதியவர்கள் பெயர் இடம் பெற்றன.
- குறிப்பாகச் சொல்வதானால் பேசும் படங்களின் கதையும் வசனமும் இலக்கிய வடிவம் பெற்றன.
- வெள்ளித்திரையில் ஒரு புதிய தமிழ், ஆனால் மக்கள் புரிந்து கொள்ளக் கூடிய தமிழ் இடம் பெற்றது.
- பேசும் பட உலகில் மாபெரும் சக்தியாகப் பின்னர் உருவெடுத்த புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர் ஐக் கலைஞர் உருவாக்கினார். நடிகர் திலகம் சிவாஜியை

உருவாக்கினார். மனோரமா நடிகை உலகிற்கு அறிமுகமானார். எனது இந்தக் கருத்தில் கற்பனை இல்லை, புகழ்ச்சி இல்லை.

- டாக்டர் எம்.ஜி.ஆருக்குக் கலைஞர் கதை வசனம் எழுதிய ராஜகுமாரிதான் முதல் கதா நாயகப் படம். பின்னர் கலைஞர் கதை வசனம் எழுதிய மலைக் கள்ளனும், மருத நாட்டு இளவரசியும் மந்திரிகுமாரியும் தான் அவருக்குப் பேசும்பட உலகில் ஒரு நிரந்தர இடத்தை அமைத்துக் கொடுத்தது.
- பராசக்தி சிவாஜி கணேசனை அறிமுகப் படுத்தியது. உயர்த்தியது. மனோகரா அவரைப் புகழின் உச்சத்திற்கே எடுத்துச் சென்றது.

கலைஞரின் நாடக மான மண்மகுடத்தில் மனோரமா நடித்தார் அதில் அவர் பேசிய கலைஞரின் வசனத்தைக் கேட்டுத்தான் கண்ணதாசன் அவருக்குப் பேசும்படத்தில் நடிக்க வாய்ப்பளித்தார்

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

நமது இலக்கியக் கர்த்தாக்கள் கலைஞரின் படைப்பில் ஒரு பெரிய குறையைக் குறிப்பிடுகிறார்கள். கலைஞரின் எழுத்துக்கள் பிரச்சார நோக்கம் கொண்டவை. அவை கலைநயம் இல்லாதவை. என்பது இவர்களின் தீர்ப்பு.

எழுத்தாளர் உலகில் சிலர் எது இலக்கியம் எது இலக்கியம் இல்லை என்பதை நிர்ணயிக்கத் தங்களிடம் தங்களிடம் மட்டும்தான் உரைகல் இருப்பதாக எழுதியும் பேசியும் வருகிறார்கள். இலக்கியக் கலையில் இலக்கணம் அவர்கள் வகுத்தது. அந்த இலக்கணம் அவர்கட்கு மட்டும்தான் தெரியும் மற்றவர்கட்கு அது சொன்னாலும் புரியாது இப்படி ஒரு கூட்டம். திராவிட இயக்க எழுத்துக்குத் தீர்ப்பளித்துக் கொண்டிருந்தது. இன்னும் அந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இலக்கியம் என்பது என்ன என்ற கேள்வி இலக்கியம் தொடங்கிய காலத்தில் இருந்து கேட்கப்பட்டு வருகிறது. இதுவரையாகும் முடிவான பதிலை எல்லோருக்கும் ஏற்கும் பதிலை நாம் கண்டதில்லை. காலஞ்சென்ற டாக்டர் கைலாசபதி ஒரு தலை சிறந்த விமர்சகர். அவர் கருத்தை ஏற்பவர், ஏற்காதவர், இருவர்களாலும் மதிக்கப்பட்டவர். இலக்கியம் என்பது பூர்த்தி செய்ய வேண்டிய கூறுபாடுகள் பற்றி பல கருத்து வேறுபாடுகள் பல இருக்கலாம். ஆனால் கருத்து வேறுபாடுகட்கு அப்பார்பட்ட ஒன்று.

இலக்கியம் அது எழுதப்படும்மொழியை வளர்க்க வேண்டும்.

இந்த நூற்றாண்டில் அண்ணாவைவிட கலைஞரைவிட தமிழுக்கு வளமூட்டியவர்கள் யார்? வலிமை யூட்டியவர்கள் யார்? புதிய நடையைப் படைத்தவர்கள் யார்? ஒவ்வொரு சொல்லுக்குள்ளும் புதிய சக்தியைப் பகுத்தியவர்கள் யார்?

மின்கம்பி செய்தி சொல்லும், இரும்பின் காந்தம்
விசையூட்டும். மின்சக்தி செம்பில் செய்த

நுண்கம்பிக் காற்றால் தரும் சொல்லின் சக்தி
நுவல்வார்தம் உணர்வுகளின் நுழைவே யன்றோ

என்பான் கவிஞன். ஒர அகராதி இரண்டு லட்சம் சொற்களைத் தாங்கி நிற்கிறது. ஆனால் அது படிப்பவர்களிடத்தில் எந்த உணர்ச்சியையு உருவாக்குவதில்லை. ஆனால் ஒரு பக்கம் கவிதை ஒருபக்கம் வசனம் படிப்பவர்களின் நிரை வரைவழைக்கிறது. அல்லது நெஞ்சில் அக்கினி போன்ற தீய்க்கும் ஆவேசத்தை உருவாக்குகிறது. சொற்கட்கு அந்தச் சக்தி எங்கிருந்துவருகிறது? முதுபவர்களின் உணர்வு அர்த்ச் சொற்களின் நுழைவதால் வருகிறது.

தன் உள்ளத்திற்குள் கடிாத ஒரு கவிஞனால் கண்ணீரை வரவழைக்கும் கவிதையை எழுத இயலாது. தன் உள்ளத்திற்குள் குமுறுகின்ற எரிமலையை அனுபவிக்காத ஒரு எழுத்தாளனால் படிப்பவர்கள் நெஞ்சம் கொந்தளிக்கு வசனத்தை, கவிதையை எழுத இயலாது. கலைஞர் தமிழ்ச் சொல்லுக்குச் சார்தந்தில் ஈர்ப்புச் சக்தியைக் கொடுத்தவர். தமிழ்ச் சொல்லுக்கு மின்சாரத்தின் விசையை ஊட்டியவர்.

- அவர் தொல்காப்பியம் எழுதவல்லவர் ஆனால்
  காப்பியம் எழுதினார். அந்தக் காப்பியத்தை
  வைத்து வருங்கால இலக்கணப்புலவர்கள்
  தொல்காப்பியம் படைக்கவேண்டும்

  அவர் நன்னூல் எழுதவில்லை. அவர் எழுதிய
  கட்டுரை நூல்களை கவிதை நூல்களை
  வைத்து. புலவர் கூட்டம் நன்னூல் எழுத
  வேண்டும்.

தமிழ் இலக்கியத்திற்கு இரண்டாயிரம் ஆண்டுப் பாரம்பரியம் உண்டு. இது எண்ணற்ற சிந்தனையாளர்களைக் கண்ட மொழி, மானுடச்சிந்தனையில் நுட்பத்தில் எல்லையைத் தொட்டவர்கள் பேசிய மொழி. எழுதிய மொழி.

நட்டோர் கொடுப்பில் நஞ்சும் உண்பத்
நனி நாகரிகம்

நாட்டிற்கு இதைவிட உயர்ந்த இலக்கணத்தை எந்த மொழியிலும் காண இயலாது.

யாதும் ஊரே யாவரும் கேளிர்

மனித நேயம். மனிதநேயம் என்று பேசுகிறார்களே அந்த மனித நேயத்திற்கு, நான்கு சொற்கலைக் கொண்ட இந்த வரிகைவிட உயர்ந்த இலக்கணம் இல்லை.

நமது முன்னோர்கள் தலைசிறந்த இலக்கியப் பாரம்பரியத்துக்குச் சொந்தக்காரர்கள் . அவர்கள் இலக்கியம் பயன் கருதியதாக இருக்க வேண்டும் என்றுதான் வகுத்தார்கள். அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பதை நிலை நாட்டவே இளங்கோ ஒரு காவியத்தையே படைத்தார். அவர் வழி வந்த பாரதி "என் பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாவித்திடவேண்டும்" என்று பாடினார். "செயல்வேண்டும், வினை கோடி செய்யத் தூண்டும் திறன் படைத்தலை வேண்டும்". என்பான் கவிஞர்.

கலைக்கும் பிரசாரத்திற்கும் இடையில்
இருக்கும் பிரிவினைக்கோடு மிகவும் மெல்லியது,
நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதத் திறம்புவதில்லையால்.

என்று பாரதிபாடுவார். இது கவிதையா அல்லது பெண்ணியப் பிரச்சாரம்?

கோரிக்கை அற்றுக் கிடக்கு தண்ணே? இங்கு
வேரில் பழுத்த பலா மிகக்
கொடியாதென்றெண்ணிடப் பட்டதன்னோ குளிர்
வடிக்கின்ற வட்ட நிலா

என்ற பாரதிதாசன் படப்பு கவிதையா அல்லது விதவைக்ள் விவாகப் பிரச்சாரமா?

காதலனுக்கு வழிவகுத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம்

என்ற பாரதிதாசன் பாடல் கவிதையா அல்லது குடும்பக் கட்டுப்பாட்டுப் பரிச்சாரமா?

இவையனைத்தும் இலக்கியம் தான். நம் முன்னோர்கள். பயன்கருதாத இலக்கியத்தை எற்றதில்லை.

"சொல்லற்க, சொல்லிற் பயனிலாச்சொல்"

என்று அறுதியிட்டு ஆணையிடுகிறார் வள்ளுவர்

இலக்கியப் படைப்பாளர்களை ஏறத்தாழ மூன்று வகையினராகக் காலாம்.

முதலாவது

உலகில் நாம் காணும் துன்பங்களை, துயர்களை, அநீதியை, அவயங்களைப் புறக்கணித்து விட்டு, பெரும்பாலும் மனத்திற் மகிழ்ச்சியூட்டும் பொழுது போக்கு இலக்கியங்கள்.

இரண்டாவது

உலகில் காணும் காட்சிகளை, நிகழ்வுகளை ஏழ்மையை, ஏற்றத்தாழ்வுகளை இருக்கின்ற நிலையில் படம் பிடிப்பது.

மூன்றாவதாக

இருக்கின்ற நிலையைப் படம் பிடித்துக் காட்டுவதோடு, பிரச்சினைகட்குத் தீர்வுகாண முயல்வது: தீர்வு தொடர்பான எண்ணங்களை எடுத்து வைப்ப.து.

கலைஞர் பெரும்பகுதி மூன்றாவது வகையைச் சேர்ந்தவர். மாற்றங்களை எதிரப்பவர்கள் இத்தகைய படைப்புகளைப் பிரச்சாரம் என்று புறக்கணிப்பது ஏதோ இன்று, நேற்றுத் தோன்றியதல்ல. காலங்காலமாக நாம் கண்டு வருவது. இப்படிப்பட்ட புறக்கணிப்புகள் நிலைத்து நிற்பதில்லை.

கலைஞருடைய புதினங்களைப் பொருத்தவரை நான் பரிந்து கொண்ட அளவில். அதாவது நோக்கம் தமிழ்ச் சமுதாயத்தில் ஒற்றுமை உணர்வை வளர்ப்பதும் வேற்றுமை உணர்வால் நமக்கு ஏற்பட்ட இழப்பை எடுத்துக் காட்டுவதும்தான்.

தமிழர்களாகிய நம் வலிமைக் குறைவு பற்றிப் பேசும் பொழுது கவிஞன் கூறுவான்.

அலைகளில் உயர மன்று: ஆழ்ந்து கடலின் சூழல்
நிலையான வாழ் சுறாவும் நீண்டவாய் முதலையு நாம்
அஞ்சுதற்குரியவல்ல அவற்றினும் முதலாவதாக
நெஞ்சிடைத் தமிழர் நீவிர் நினைத்திடத் தகுந்த அச்சம்
ஒன்று நும் கலத்தில் உள்ள ஓட்டைகள்: பகைவர் உம்மை
வென்றுளசரிதை உங்கள் விரிசலின் சரதை அன்றோ

* * * * *

கோடியிற் குறைவில்லா கூட்டமாய்ப்பெருகி உங்கள்
மாடியும், நிலவும் காணும் வலியிழந்தழியச் செய்யும்

கடும்பகை உமது பண்பில் கலந்துவாழ கறையா. உம்மோர்
நெடும்பகை புறந்தது அன்று. நீவிற் நும் பகைவர் காணீர்.

" பகைவர் உம்மை
வென்றுளசர்தை உங்கள் விரிசலின சரிதை"

என்பதும்

நெடும்பகை புறத்தது அன்று: நீவிர் நும் பகைவர்
என்பதும் நூற்றுக்கு நூறு உண்மை.

கலைஞர் தமது புதினங்களில் தமிழ் மக்கட்கு ஓர் ஒற்றுமைப் பாலத்தை அமைக்கும் நோக்கத்தை முன் வைத்திருக்கிறார்.

பொன்னர்-சங்கர் ஒர சிறந்த வரலாற்றுப் புதினம். நான் கிராமத்தில் சிறுவனாக இருந்த பொழுது இரவு 8 மணிக்குத் தொடங்கி, காலை வரை உடுக்கை

யடித்துக்கொண்டு இந்தக் கதை சொல்லப் படுவதைக் கேட்டிருக்கிறேன். கொங்கு நாட்டில் எல்லோருக்கும் அறிந்த கதை. இது தலை முறை, தலை முறையாக வேளாள கவுண்டர், வேட்டுவ கவுண்டர் ஆகியோருக்குக் கிடையே நடந்த போர்க்கதையாகவே சொல்லப்பட்டு வந்தது. அதை மாற்றி பொன்னர் -சங்கர் புதினத்தில் அதை இருகுடும்பத்தின் இருகுழுவின் இடையே நடந்த போராக அமைத்து. கொங்கு வேளாலர்களின் வீரகாவியமாக அதை மாற்றியமைத்திருக்கிறார். கொங்கு நாட்டில் இது அண்ணன் மார் கதை என்றும். பொன்னர்-சங்கர் கதை என்றும் குன்னுடையாக் கவுண்டர் கதை என்றும் வழங்கப்படுகிறது. அக்கதை தொடர்பாக வழக்கில் இருக்கும் வரலாறு தொடர்பன செய்திகள் அனைத்தும் ஓர் ஆய்வு மாணவர்போல தொகுத்து அந்தப் புதினத்தை எழுதியிருக்கிறார். எடுத்தால் படித்து முடிக்காது கீழே வைக்காத கலையுடன் எழுதப்பட்ட புதினம். தென் பாண்டிச் சிங்கம் என்ற புதினத்தை எடுத்துக் கொண்டாலும் இரண்டு நாடுகள் உறங்காப்புலி ஒருவனின் தன்னலத்தால். துரோகத்தால் அழிந்து விடுகின்றன என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

கண்ணை மடிக்காண்ட நாம் தமிழரின் வீரத்தை, அறத்தை பண்பைப் புகழ் வதைவிட்டுக் கொஞ்சம் திறந்த மனத்தோடு பர்ப்போமானால் நம்மை நாமே அழித்துக் கொள்ளும்" சிறுமை நம்மோடு தொன்று தொட்டு வந்திருக்கிறது. மூவேந்தர் காலத்திலும் இருந்தது. குறுநில மன்னர்கள் காலத்திலும் இருந்தது. அம்பலத்தார்கள். வாணவராயர்கள், போன்றோர் மத்தியிலும் இருந்தது. இன்றும் இருக்கிறது. பொதுவாக உலகில் பொது எதிரிகள் அல்லது பொதுப்பிரச்சினைகள் என்று வரும்பொழுது ஒவ்வொரு இன மக்கட்குள்ளும் ஓர் ஒற்றுமை ஒன்றுபடுவது நாம் சாதாரணமாகக் கண்ட ஒன்று. தமிழினத்தவர்

எங்கு வாழினும் எதிரி குழினும்
தங்கள் உட்பகை தவிரா எளியவர்கள்
நலமெனப்படும் கிரகம் யாவையும்
நண்பராகலாம் ஒன்று சேரலாம்
தவம் கும்பினும் தமிழர் ஒன்றி ஓர்
தலைமை ஒப்பிய சரிதை ஏதடா

எனக் கேள்வி எழுப்புவான் கவிஞன் கலைஞரின் இலக்கியப் படைப்புகளில் தமிழரின் இந்தப் பலவீனம் தங்களுக்கு சுட்டிக் காட்டப்படுகிறது. இயன்ற இடங்களில் எல்லாம்.

இயன்ற இடங்களில் எல்லாம் விரிசலைக் குறைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்

காலத்தைக் காட்டுவதும் காவியம் பின்
நாம் விரும்பும்
ஞானத்தைக் கற்பனையில்
நாட்டுவதும் காவியம்

கலைஞர் இன்றைய சமுதாயத்தில் காணப்படும் அவலங்கள் அனைத்தையும் படம் பிடித்திருக்கிறார். இவற்றைப் போக்குவதற்கான வழிவகைகள் பற்றியும் எண்ணியிருக்கிறார்

அவர் காட்சிவருணனைபாடும் கவிஞர் அல்லர்: செயல் வீரர். இந்தச் சமுதாயத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்டவர். தீமையை எதிர்த்துப் போராடியவர்.

நமது சமுதாயத்தில் நல்லவர்கள் என்பவர்கள் பிறருக்கு நன்மை செய்பவர்கள் என்றே கருதப்படுகிறது. நல்லவர்களைப் பற்றி அமெரிக்கத் தத்துவவாதி ஞிமீஷ்மீஹ் கூறும் இலக்கணம் பின்வருமாறு.

good man is one who fight evil.

கலைஞர் கவிதையை. அவர் எழுத்துகளை ஆயுதமாகக் கொண்டு தீமையை எதிர்த்தவர்.

- அரசியல் வாழ்வில் தீமையை எதிர்த்தவர்
- பொருளாதார வாழ்வில் சுரண்டலை எதிர்த்தவர்

சமுதாய வாழ்வில் உயர்வு தாழ்வுகளை எதிர்த்தவர் மட்டுமல்ல, எதிர்த்துப் போராடியவர். போராடிக் கொண்டிருப்பவர்.

இந்தப் போராட்டத்திற்கு அவர் இலக்கியத்தின் எல்லா வடிவங்களையும் பயன்படுத்தினார். கவிதையையும் பயன்படுத்தினார்.

கனல் இருக்கும் அவர்பாட்டில்: கவலை ஊற்றில்
கண்களெலாம் குளமாக வந்து பாயும்
புனல் இருக்கும் அவர் பாட்டில் வையத்துள்ள
புன்மைகளை ஒருசேர எரித்தழிக்கும்
தழல் இருக்கும் அவர் பாட்டில்:

இலட்சியம் என்பது என்ன என்று கூறுகிறார்

இலட்சியம் என்பது
எட்டிப் பறித்திடும் மல்லிகையல்ல
எதிர்நீச்சல். எரிமலைமேல் கொடிய நாட்டல்
இந்தப் பயணத்திற்கு யார்துணை:
வில்லில் கணையாய் இருப்போம் என்றும்
வேலின் முனையாய் வாழ்வோம் என்றும்
சொல்லில் உறுதி காக்கும் கூட்டம்
கல்லில் எழுத்தாய் மின்னிடும் போது
கவலை எதற்கு எனக்கு?
கழகம் தான் நமக்குக் கிழக்கு.

கருத்தும் கவிதையும் கலந்து பெருக்கெடுத்து ஓடுகின்றன.

மூங்கில் இலைமேல

தூங்கும் பனி நீரே

என்று ஏற்றம் இறைத்தவன் பாடிய பாட்டு

கவிச்சக்கரவர்தி கம்பனையே சற்றுத் திணற வைத்ததாகக் கதை உண்டு. அதே பனித் துளியைப் பற்றி இன்னொரு அடிகான உருவகம். கலைஞர் கவிதை தரும உருவகம்

பனி முட்டை அடை காக்கும்

பசும் புல்லில் தரை மீது.

வியர்வை நீரைப் பற்றி ஒரு கவிதைவரி:

அழைப்பில்லாமல் வருகின்ற

அலைகடல் முத்து

உழைத்து மாளாத பாட்டாளியின்

ஒரே சொத்து

அண்ணாவைப் பற்றி எழுதும் பொழுது:

இடி இடிக்கும் பேச்சில்-இளமை

துடி துடிக்கம் எழுத்தில்-தேன் ஒரு

படி இனிக்கும் பண்பில்- அதில்

வெடி முழக்கம் செயலில் - விடாப்

பிடியிருக்கும் குணத்தில் -விடுதலைக்

கொடியிருக்கும் கையில் - கொஞ்சம்

முடியிருக்கும் தலையில்

அண்ணாவைப்பற்றிய கவிதையில் இன்னொரு இடத்தில்

கவியினில் பொருளைக் கரும்பினில் சுவையெனக்

கதிரினில் ஒளியெனக் காவினில் மலரென

நிலவினில் குளிரென நிலமிகை வளமெனக்

குலவிடும் அருவி குழறிடும் மொழியென

உலவிடும் காற்றல் ஏறிடும் இசையென

அலையெழுங்கடலில் ஆழம் நுரையெனக்

கலை மனம் கமழக் கூடிய கவிஞர்

தலைமகன் அண்ணா திருப்புகழ் பாடிட

நிலமகள் துடிக்கும் கண்ணீர் அந்தோ

வெள்ளம் வெள்ளம் பெருவெள்ளம்

தொழிலாளிக்கு இலக்கணமாக இருப்பவன்

உழவன் அவன் வயிர்வை சிந்தி இம்மேதினி காப்பவன்

உழவனைப் பற்றி அவர்பாடிய வரிகள் சில:

உலவனோர் தாமரை
சேற்றில் மலரும் அவன் வாழ்வு
உழவனோர் மன்னர்
நாற்று முடியிருக்கும் அவன் தலையில்
உழவன் ஓர் வீரன்-என்றால்
போர் இருக்கும் அவன் களத்தில் [வைக்கோல் போர்]
உழவன் ஓர் ஓவியன்
வயல் அனைத்தும் அவன்
வரைந்த சித்திரம்
உழவன் ஓர் தெய்வம்
உயிர்களைக் காப்பதால்

இதனினும்

பொதுவாக நம்மில் பலரிடம் ஒருகுறை உண்டு நாமாக எதையும் செய்யமாட்டோம் யாராவது முன்வந்து ஏதாவது செய்தால் அதில் யிரம் குறை காண்போம். நான் முதல் முதலில் பணியாற்றிய கல்லூரி முதல்வர் பற்றிய ஒரு நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது. அவர் ஓர் ஆங்கிலோ இந்தியர். பெரும்பாலும் தன்னை ஆஙகிலேயராகத்தான் நினைத்துக் கொள்வார். அவர் முதல்வராக இருந்தாலும் கல்லூரியிலுள்ள workshop-ஏதாவது தொழிலாளியொடு தொழிலாளியாக ஏதாவது செய்து கொண்டிருப்பார். மேலும் அவருக்கு விளையாட்டுகளில் ஆர்வம் அதிகம். நாம் long jump தாண்டுகிறோம் அல்லவா. தாண்டிய நீளத்தைத் துல்லியமாக அளப்பதற்காக ஒரு கருவி செய்தார் அந்தக் கருவியைப் பற்றி இங்கு அதிகமாக விவரிக்கவில்லை. அந்தக் கருவியைச் செய்து முடித்ததும் அதனொடு ஓர் அறிவிப்புப் பலகையையும் மாட்டி இருந்தார். அதில் அவர் பின்வருமாறு எழுதியிருந்தார்.

"இந்தக் கருவியில் 12 குறைகள்
இருக்கின்றன. நீ பதின்மூன்றாவது குறையைக்
கண்டுபிடித்தால் அதை நிவர்த்தி
செய்யவும்"

எனக்கு முதலில் பொருள் விளங்கவில்லை. ஒரு முறை workshop-இல் அவரைச் சந்தித்த பொழுது இந்த அறிவிப்பின் நோக்கம் என்ன? பொருள் என்ன? என்று கேட்டேன் அதற்கு அவர்.

"உனக்கு இந்த அறிவிப்பு என்ன சொல்கிறது
என்பது புரியவில்லையா"

என்று கேட்டார். நான் "புரியவில்லை" என்று கூறினேன் அவர் கொடுத்த விளக்கம்

இந்த நாட்டில் நீங்களாக எதையும்
செய்யமாட்டீர்கள். தப்பித்தவறி
உங்களில் யாராவது ஒருவர்
முன்வந்து ஏதாவது செய்தால்,
அதை பூதக்கண்ணாடி வைது
ஆராய்ந்து பார்த் அதில் 1000
குறைகாணும் மேதைகள் இந்த
நாட்டில் இருக்கிறார்கள்
இந்தப் பலகை அவர்களுக்காக
எழுதப்பட்டது. அது கூறும்
செய்தி இதுதான்.
உன்னால் செய்ய முடிந்தால்
ஏதாவது செய். செய்ய
முயற்சி செய் இல்லாவிட்டால்
வாயை மூடிக்கொண்டு சும்மா இரு
செய்பவனைக் குறை கூறாதே.
என்று விளக்கினார்.

மைய அரசிற்கு சி,எஸ் அவர்கள் எஃகுத் தொழிற்சாலைகட்கு அமைச்சராக இருந்தார் அவர் நாடாளு மன்றத்தில் பேசும் பொழுது.

"நான் எஃகுத் தொழிற்சாலையில் உற்பத்தியைப் பெரிய அளவில் பெருக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட முயற்சிகளில் அவ்வப்பொழுது தவறுகள் நிகழும். தவறுகளே இல்லாமல் ஒரு முன்னேற்றப் பணியைச் செய்ய வேண்டுமானால் அது என்னால் இயலாது" என்று திட்ட வட்டமாகக் கூறுகிறார் இந்தக் கருத்தை கடினமான ஒரு பொருளைக் கலைஞர் கவிதையாக்குகிறார். முதல்வராக இருந்து அவர் செய்த பணிகளில் குறைகாண்பவர்களைப் பற்றிப் பாடுகிறார்.

சிரம் காட்டி எமை ஏற்காமல் சிலர்
ஓட்டைகளைக் காட்டுகின்றார்-நாத
சுரம் காட்டும் ஓட்டையெலாம்
நல்லிசைக்கே என்றிடுவேன்.

ஓட்டைகளை இல்லாவிட்டால் நாத சுத்தத்தில் இசையே வராது. தவறுகளே நடக்கக்கூடாது என்றாலும் ஒரு காரியமும் செய்ய இயலாது. இருப்பினும் அவர் தவறு கண்டு சொல்பவர்களைக் கண்டிக்கவில்லை. அவையும் எனக்குப் பயன்படும் என்றே பார்க்கிறார்.

கவிஞர் கண்ணதாசன் கலைஞரோடு நீண்டு நட்புக் கொண்டு வாழ்ந்தவர் பின்னர் அவருக்கு எதிராகச் சென்றவர். கடுமையாக விமர்சித்தவர் கலைஞரை நாகரிகமான மொழியிலும் விமர்சித்தார். அவ்வளவு நாகரிகமில்லா மொழியிலும் விமர்சித்தார்.

கலைஞர் எந்தக் காலத்திலும் பழைய நட்பையும், பாசத்தையும் மறந்ததில்லை கண்ணதாசன் அவர்கள் மறைவிற்குப் பாடிய இரங்கற்பாவில்.

தென்றலாக வீசியவன் நீ
என் நெஞ்சில் தீயாகச் சுட்டவனும் நீ
அப்போது அன்றிலாக நம் நட்பு
திகழ்ந்ததே அன்றி
அணைந்த தீபமாக ஆனதே இல்லை.

-நண்பா

நிலையில்லா மனம் உனக்கு
ஆனாலும் நிலைத்த புகழ் உனக்கு

கவிதைக்குக் கலைஞர் கூறும் இலக்கணம் எண்ணத் தக்கது. அதையும் கவிதையிலேயே கூறியிருக்கிறார்.

பொதுவாகக் கலைஞர் தாம் தொட்ட துறை எதுவானாலும் அற்கு ஒரு புதுப் பரிமாணம் சேர்ப்பவர். தனித் தன்மை சேர்ப்பவர். தொன்று தொட்டுவரும் கவிதை வடிவத்தை இன்னும் மரபுக் கவிதை என்ற கூறுகிறார்கள். இப்பொழுது பலரால் எழுதப்படும் கவிதையைப் புதுக் கவிதை என்றும் கூறுகிறார்கள் கலைஞர் கவிதை மரபுக் கவிதை அன்று. அவரே பல இடங்களில் கூறுகிறார். அந்தப்பொருளில்தான் அவர் கவிதை அல்ல என்று தலைப்பிட்டுக் கவிதை எழுதினார். அவருடைய கவிதை வசன கவிதை என்று பாரதி எழுதிய வகையில் அமைந்ததாக எண்ணப்படும் புதுக் கவிதையுமல்ல. கலைஞர் கவிதை ஒரு தனிவடிவம் கொண்டது. அதை டாக்டர் அப்துல்ரகுமான் "கவி வசனம்" என்கிறார். இந்த விளக்கம் எந்த அளவிற்குப் பொருந்தும் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் உண்மை, கலைஞர் கவிதையிலும் ஒரு புதுவடிவத்தை உருவாக்கியிருக்கிறார்.

கலைஞர் அடிமுதல் நுனிவரை ஒரு படைப்பாளி. அவர் எடுத்துக் கொண்ட துறை எதுவானாலும் அதற்கு ஒரு புதுப் பரிமாணம் சேர்த்திருக்கிறார். தமது முன்னோர்களிடமிருந்து அவர் பெற்ற செல்வம் எதுவாயினம் அதை அவர் அப்படியே தன் பின்னோருக்கு விட்டுச் செல்லவில்லை. அதை மேலும் வளப்படுத்தி. வலிமை யூட்டி இன்னும் சில புதிய உத்திகளை வடிவங்களை அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்கிறார்.

அரசியல் புயல்கள் எழுப்பும் புழுதிகள் மறைந்து, கட்சி வேற்றுமைகளின் கசப்புகள் மறக்கப்பட்டு போட்டியின் வெம்மைகள் தணிந்து. நாளை வரலாற்றாசிரியர் இருபதாவது நூற்றாண்டின் தமிழக வரலாற்றை எழுதுவானானால். இரண்டு முக்கிய அம்சங்கள் தலைதூக்கி நிற்கும்.

- ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது மன்று கூறுபாடுகளைக் கொண்ட.
- சமுதாய முன்னேற்றம்
- பொருளாதார முன்னேற்றம்
- அரசியல் முன்னேற்றம்

இந்த முயற்சியில் சமுதாய முன்னேற்றத்தை முன்னிலைப்படுத்தி பெரியார், அண்ணா, கலைஞர் என்ற மூவர், தமிழகத்தில் மூலை முடுக்குகள் எல்லாம் சென்று பணியாற்றினர். வேறு மூவர்கள் சைவத்தைப் பரப்பியதற்கு அடுத்த மூவர்கள் இவர்கள்.

- இரண்டாவதாக இந்த முன்னேற்றம்
- போராட்டத்தை இலக்கியத்தை ஊடகமாக கருவியாக வைத்து நடத்திய இரட்டையர்கள் அண்ணாவும், கலைஞரும் இந்த இரட்டையர்கட்கு என்னால் இன்னொரு சான்ற காண இயலவில்லை.

இந்த இருவரும் தமிழ் இலக்கிய உலகின் மாபெரும் தாக்கத்தை உருவாக்கியவர்கள். தமிழ் இலக்கியத்தின் ஒவ்வொரு துறையிலும் விசுவரூபம் எடுத்து நின்றவர்கள். தமிழ் உரை நடையில், நாடகத்தில், பேசும்படத்தில், புதினம், சிறுகதைகளின், மேடைப்பேச்சில் இவர்கள் ஏற்படுத்திய தாக்கத்திற்கு இணையான ஒன்று தமிழ் மொழியின் நீண்ட வரலாற்றில் இதுவரை நடைபெறவில்லை.

கலைஞர் புதினங்களைப் படைத்தார் நாடகங்களைப்படைத்தார். கவிதைகளைப் படைத்தார்

கட்டுரைகளைப் படைத்தார் என்பது மட்டும் அவரது பங்களிப்பல்ல. அவர் புதிய தமிழை. தமிழ் நடையைத் தமிழுலகிற்குப் படைத்துத் தந்தவர்.

அவரது பங்களிப்பல்ல. அவர் புதிய தமிழை தமிழ் நடையைத் தமிழுலகிற்குப் படைத்துத் தந்தவர்

ஒரு நாகரிக சமுதாயம் நல்லவற்றைப் பாராட்ட வேண்டும். இங்கு காழ்ப்புணர்ச்சி கூடாது. தகுந்தவற்றைப் பாராட்டுவதில் கஞ்சத்தனமும் கூடாது.

கலைஞர் என்ற தமிழ் எழுத்தாளர் இலக்கிய வாதியை படைப்பாளி கட்சிகட்கு அப்பாற்பட்டவர். அவர் தமிழ் நிலம் முழுமைக்கும் சொந்தம். தமிழ் இனம்

முழுமைக்கும் சொந்தம். நாளை அவருக்கு இந்தத் தகுதியை அவருக்கு வரலாறு வழங்கப் போகிறது. இன்று நாம் வழங்கினால் அது நமக்குப் பெருமை. அவருக்கு கவிக்கோ விருதை இன்று வழங்கி வாணியம் பாடி அழியாப் புகழ் தேடிக் கொண்டது.

பாராட்டுகிறேன்.